මහජන බැංකුව | மக்கள் வங்கி

PEOPLE'S BANK

# கேள்விப்பத்திர அறிவித்தல்

மக்கள் வங்கியினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளைப் பெற்றுக் கொள்ளுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சேவை வழங்குபவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.

| கேள்விப்பத்திர இலக்கம் | விபரம் | விலைகூறல் பிணைப்பொறுப்பு முறியின் பெறுமதி (ரூ) | விண்ணப்பப் படிவம் வழங்கப்படும் இறுதி திகதியும் நேரமும் | கேள்விப்பத்திரம் மூடப்படும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| P/043/2025 | **"பெங்குவய் ஒபய்"** சஞ்சிகையை மெய்விளக்கப்படுத்தல் மற்றும் வடிவமைத்தல் என்பவற்றிற்காக தகுதியான வழங்குபவர் ஒருவரை தெரிவுசெய்தல்<br><br>"Selection of a vendor for Conceptualizing & Designing **"BANKUWAI OBAI"** Magazine" | மொத்த மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 3% | 2025.01.24ஆம் திகதி பி.ப.2.00 மணி | 2025.01.27ஆம் திகதி பி.ப.2.00 மணி |

1. கேள்விப்பத்திர விண்ணப்பங்களை **2025.01.07ஆம் திகதி முதல் 2025.01.24ஆம் திகதி வரை** வங்கி வேலை நாட்களில் **முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை** இல: 30/101, கியூ வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் வழங்கல் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அதற்காக ஒரு கேள்விப்பத்திர விண்ணபத்திற்காக மீளச் செலுத்தப்படாத **ரூ.5,000/-** கட்டணமொன்றுடன் குறித்த நிறுவனத்தின் விண்ணப்ப கடிதத்தையும் வழங்கல் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

2. ஒழுங்காகத் தயாரிக்கப்பட்ட கேள்விப் பத்திரத்துடன் மேலே அட்டவணையில் குறிப்பிட்ட பெறுமதியைக் கொண்ட விலைகூறல் பிணைப்பொறுப்பு முறியொன்றை ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து(மக்கள் வங்கியைத் தவிர்த்து) பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும். அது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 180 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருக்க வேண்டும். இதற்காக 180 நாட்களுக்குச் செல்லுபடியான வங்கி கொடுப்பனவு கட்டளையொன்றை அல்லது வங்கி வரைவொன்றைச் சமர்ப்பிக்க முடியும். தனிப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மக்கள் வங்கியின் எந்தவொரு விதத்திலான கணக்கொன்றில் பண வடிவில் உள்ள வைப்புத் தொகை மற்றும் அதற்கு உரியதாக எதிரீடு செய்யும் கடிதமாக இருந்தாலும் பிணைப்பொறுப்பு முறியாக ஏற்றுக்கொள்ள முடியும்.

3. முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்களை மக்கள் வங்கி, இல: 30/101, கியூ வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் வழங்கல் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இட வேண்டும். இன்றேல் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். மேற் குறிப்பிட்ட திகதியன்று கேள்விப்பத்திரம் பி.ப. 2.00 மணிக்கு மூடப்படுவதோடு, அன்றைய தினம் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படாமலே மீள ஒப்படைக்கப்படும்.

4. அனைத்து அல்லது எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் மற்றும் எவ்வித காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரமொன்றின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் உரிமை மக்கள் வங்கிக்கு உண்டு. ஆகக் குறைந்த விலைகளை ஏற்றுக்கொள்ளுவதற்கு வங்கி கட்டுப்பட்டிருக்கவில்லை.

5. இது தொடர்பான மேலதிக விபரங்களை பிரதம முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.


| | |
|---|---|
| **பிரதம முகாமையாளர் (வழங்கல்)** | **தொலைபேசி இலக்கம் : 2439577/8, 2307326** |
| **மக்கள் வங்கி,** | **தொலைநகல் : 2439576** |
| **வழங்கல் திணைக்களம்,** | **இணையத்தளம் : www.peoplesbank.lk** |
| **30/101, கியு வீதி, கொழும்பு 02.** | **மின்னஞ்சல் : supplies@peoplesbank.lk** |